# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 10.07.2020. | 1) தூத்துக்குடி மாமன்றத்தின் தீர்மான எண். 77 நாள் 26.03.2020 ஒப்புதலுக்கிணங்க இம்மாநகராட்சி 60 வார்டு பகுதிகளிலும் மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணியில் கழட்டப்பட்டு வரும் அனைத்து வகை பழைய தெருவிளக்கு பொருத்திகளையும் அவ்வப்போது சேகரம் செய்யப்பட்டு எடுத்துக்கொள்ளும் வகையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நடவடிக்கைகள் கடந்த 10.06.2020ம் தேதியன்று மாநகராட்சி மைய அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. அதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனத்தார்கள் கலந்து கொண்டு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் விபரம் வருமாறு அதே நேரம் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வர பெறப்படவில்லை. | 112) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| **வரிசை எண்** | **ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்** | **கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்வி தொகை** |
| 1 | SMS Traders (Maha Raja) Ettayapuram Road, Thoothukudi | Rs. 12,60,000.00 |
| 2 | Anu Traders . Toovipuram 2nd Street. Thoothukudi | Rs. 12.61.000.00 |
| 3 | Hope Trading<br>Poobalrayarpuram 6th street. Thoothukudi | Rs. 12.63.000.00 |
| | மேலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் யாரும் சமர்ப்பிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து மேற்படி ஏலக்கேள்வியில் M.S, Hope Trading தூத்துக்குடி நிறுவனத்தாரின் ரூ. 12,63,000/– அதிகபட்ச கேள்வி தொகையானது மதிப்பீட்டு தொகையினை விட கூடுதலாக உள்ளதை ஏற்கப்பட்டு இவ்வலுவலக 09.06.2020 ம் தேதிய கடிதத்தில் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ. 12,63,000/– மற்றும் GST 18% தொகை ரூ. 2,27,340/– சேர்த்து மொத்தம் ரூ. 14,90,340/–ஐ செலுத்த ஏலதாரர் நிறுவனத்தாருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.<br>இதனைத் தொடர்ந்து மேற்படி உச்ச ஏலக்கேள்வி நிறுவனத்தார் 18.06.2020 ல் ஏற்கனவே செலுத்திய முன் வைப்புத்தொகை ரூ 25000/– போக மீதித் தொகை ரூ. 14,65,340/–க்கான தொகையினை வங்கி வரைவு காசோலையாக ரூ. 6,75,000/–. 3,00,000/– மற்றும் ரூ. 4,90,340/–யை அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்.<br>எனவே மேற்படி ஏலத்தொகையினை முழுமையாக மாநகராட்சியில் செலுத்தியுள்ளதற்கிணங்க தெருவிளக்கு LED Conversion பணியில் கழட்டப்பட்டு வரும் அனைத்து பழைய மின் விளக்கு பொருத்திகளையும் அதனைச் சார்ந்த G1 பைப் மற்றும் கிளாம்ப் செட்டுகளுடன் அவ்வப்போது தங்களது சொந்த பொறுப்பில் எடுத்துக்கொள்ள M.S. Hope Trading தூத்துக்குடி நிறுவனத்தாருக்கு ஆணை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br>**1)** M.S, Hope Trading தூத்துக்குடி நிறுவனத்தாரின் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ. 12,63,000/– 18 சதவிகிதம் ஜிஎஸ்டி ஐ மாமன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.<br><br>2) ஏலக்கேள்வி தொகையினை முழுமையாக செலுத்தியுள்ளதால் மேற்சொல்லப்பட்ட பழைய பொருட்களை எடுத்துக்கொள்ள M.S, Hope Trading தூத்துக்குடி நிறுவனத்தாருக்கு உத்தரவு வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். இ3/925/2020 | |
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பிரையண்ட் நகர் 4வது தெரு பகுதியில் உள்ள பூங்காவில் சுற்றுசுவர், பேவர்பிளாக் தளம், கிணற்று சரள் நிரப்புதல் மற்றும் பூங்கா முகப்பில் பெயர் பலகை அமைத்தல் பணிக்காக ரூ. 25,20,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 09.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தாரர்களின் விலைப்புள்ளி உறை 24.06.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. I. ஜெயசீலன்<br>மதிப்பீட்டை விட 0.20 சதவிகிதம் குறைவு (ரூ. 21,95,551.00)<br>2)திரு. I. சுரேஷ் ஜெயக்குமார்<br>மதிப்பீட்டை விட 4.92 சதவிகிதம் அதிகம் (ரூ. 23,08,132.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20சதவிகிதம் குறைவான தொகை ரூ. 21,95,551.00 (GST இல்லாமல் ) கொடுத்துள்ள திரு. I. ஜெயசீலன் என்வரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட 0.2 சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு. I. ஜெயசீலன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ3/498/2020 | 113. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் குடிநீர்த்திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 34 துரைக்கனி நகர், மடத்தூர் பைபாஸ் ரோடு முதல் இபி காலனி மற்றும் நியு சுந்தர் நகர் ஆகிய தெருப்பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்வது துரைக்கனி நகரில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணிக்காக ரூ. 26,10,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 09.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 24.06.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. T. முருகன்<br>மதிப்பீட்டை விட 0.35 சதவிகிதம் குறைவு (ரூ. 22,96,996.70)<br>2)திரு J. சுரேஷ் ஜெயக்குமார்,<br>மதிப்பீட்டை விட 1.24 சதவிகிதம் அதிகம் (ரூ. 23,33,671.60) | 114) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.35 சதவிகிதம் குறைவாக தொகை ரூ.22,96,996.70 (GST இல்லாமல்) கொடுத்துள்ள திரு. T. முருகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1) மதிப்பீட்டை விட 0.35 சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு. T. முருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ2/0052/2020 | |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெறும் சீர்மிகு நகர அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி பணிகளை பார்வையிடவும், பணியினை அளவீடு செய்து. செலவின பட்டியல் தயார் செய்ய இளநிலை பொறியாளர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் உதவிட ஏதுவாக 13 நபர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களாக , தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 2019–2020ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட பட்டியலின்படி, தினக்கூலி அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளரை நகர்புற வாழ்வாதார மையம் (City Livehood centre) மூலம் 01.01.2020 முதல் ஓராண்டு காலத்திற்கு 13 நபர்களை தற்காலிக அடிப்படையில் பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், இதற்கு ஆகும் கோராய செலவினம் ஓராண்டிற்கு ரூ. 23.26 லட்சத்தினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியாளர்களுக்கு 01.01.2020 முதல் 30.06.2020 வரை ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ5/0186/17–18 | 115. அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.10.07.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி